அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 15/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
16, மே 1988.

அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவருக்கும்.

குறைவான கல்வித்தகைமைகளையுடைய உத்தியோகத்தர்களை
இணைந்த சேவைகளில் சமாந்தர தரங்களில் சேர்த்துக்கொள்ளல்.

உங்கள் அமைச்சில் அல்லது அமைச்சின் கீழ் உள்ள திணைக்களத்தில் தற்பொழுது சேவையாற்றுபவர்களும் கீழ்க்காணும் வகுதிகளைச் சேர்ந்தவர்களும் அதாவது,

(அ) பதவிநிலை சாராத தரத்தைச் சேர்ந்தவரும்,

(ஆ) நிரந்தர பதவி வகிப்பவரும்,

(இ) சம்பந்தப்பட்ட பதவியின் ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிட்டவாறு அப்பதவிக்குரிய ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டிராதவரும்.

ஆகிய ஒவ்வொருவரினதும் பெயர், பிறந்த திகதி, சேவையும்/அல்லது வகிக்கும் பதவி நியமிக்கும் அதிகாரியின் பதவிப் பெயர் என்னும் விபரங்களடங்கிய ஓர் அறிக்கையை இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கவும்.

02. தயைகூர்ந்து இந்த விபரங்கள் 30 ஜூன் 1988ஆம் திகதிக்கு முன் அவரை வந்தடையுமாறு வழிவகுக்கவும்

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.